இனம்

இனம் இனத்தைச் சேரும்

ISSN : 2455 - 0531

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

International E-Journal of Tamil Studies

UAN.TN03D0061112

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:4 இதழ்:15 நவம்பர் 2018 Vol. 4 Issue : 15 November 2018






த.சத்தியராஜ்
ச.இராமலட்சுமி
ப.கிருஷ்ணமூர்த்தி
சி.சாவித்ரி
சு.பேச்சியம்மாள்
மு.ஜெகதீசன்
கி.சங்கரநாராயணன்

இரா.இராமகுமார்
க.பாலாஜி
தி.நிரஞ்சனி
கி.ஜெகதீசன்

ரா.தக்‌ஷஷாயினி
ஜீ.பால்ராஜ்
பா.கவிதா

Inam ISSN : 2455 - 0531

UAN.TN03D0061112

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

*An Internationally Refereed e_ Journal of Tamil Studies*

## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
முனைவர் த.சத்தியராஜ்

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் இரா.இராஜா (திருச்சி)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (தஞ்சாவூர்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## இதழாக்கமும் வெளியீடும்

முனைவர் த.சத்தியராஜ்
கோயமுத்தூர்
09600370671
inameditor@gmail.com
www.inamtamil.com

நவம்பர் 2018 மலர் : 4 இதழ் : 15

November 2018 Volume IV Issue 15

# உள்ளே …

## தமிழ்ச் செவ்வியல்

**பாண்டிய நாடும் மரபிலக்கண உருவாக்கங்களும்**
**Pāndiyaā's kingdom vastly introduced cause of authentic grammars**
த.சத்தியராஜ் | 4

**நற்றிணையில் சமுதாயச் சூழலும் தொழில் மாந்தரும்**
**Social environment and occupation in Nattrinai**
முனைவர் ச.இராமலட்சுமி | 12

**மருதனிளநாகனார் பாடல்கள் காட்டும் பண்டைய வழிபாட்டு முறைகள்**
**Ancient religious rituals and performance through the marutaṉiḷanākaṉ songs**
முனைவர் ப.கிருஷ்ணமூர்த்தி | 17

**ஒப்பீட்டு நோக்கில் திருக்குறளும் சுமதி சதகமும்**
**A comparative study of Thirukkural and Sumathisadagam**
முனைவர் சி.சாவித்ரி | 23

**சங்க இலக்கியத்தில் உரல், உலக்கையின் பயன்பாடு**
**Mortar and pestle are still employed in parts of Tamil Classical Literature.**
முனைவர் சு.பேச்சியம்மாள் | 40

**ஐங்குறுநூற்று மருதத்திணைப் பாடல்களில் பரத்தமை ஒழுக்கம் மறுத்தல்**
**Ainkurunuru Maruthathinai Paadalkalil Parathamai Olukkam Maruthal**
முனைவர் மு.ஜெகதீசன் | 49

**வினாப் பெயர்கள்: இலக்கணிகளின் பார்வைகளும் பதிவுகளும்**
**Interrogative Nouns: Grammarian's Perspectives and Observations**
முனைவர் கி.சங்கர நாராயணன் | 64

…




## தற்கால இலக்கியம்


**மனதை மயக்கும் தாலாட்டு**
**Mind-blowing roller**
முனைவர் இரா.இராமகுமார் | 69


## வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்


**சமூக வரலாற்றுப் பின்புலத்தில் பாண்டிய நாட்டு நீரியல் மேலாண்மை இனக்குழுக்கள் (மள்ளர் - மடையர் - மடைச்சியர்)**
**SOCIO-HISTORICAL BACK GROUND OF WATER RESOURCE MANAGEMENT TRIBES IN THE LAND OF KING PANDIAS [Mallar-Madaiyar-Madichiyar]**
முனைவர் க. பாலாஜி | 75

**சமயங்கள் கூறும் விலங்குகளின் தெய்வீகத் தன்மைகளும், மீறப்படும் விதங்களும் - விலங்குரிமை ஒழுக்கவியலை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு**
**Divine characteristics of the animals, and the breach of the animals - a study based on animal ethics**
திரவியராசா நிரஞ்சினி | 86

**நாட்டுக்கோழி வணிகக்கோழியான வரலாறு**
**Transformed the Jungle fowl into today's commercial chicken**
முனைவர் கி.ஜெகதீசன் | 97

**விவேகானந்தரின் ஆளுமை பற்றிய சிந்தனைகள்: ஒரு மெய்யியல் ஆய்வு**
**The thought of the personality by Viveganandar: A Philosophical Approach**
தக்ஷஷாயினி ராஜேந்திரன் | 101

**கிராமியக்கலைகளின் மறைவினால் இன்றைய சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள்**
**In present society to the problems faced by the disappearance village art**
இளஞ்சைவப்புலவர் ஜீ.பால்ராஜ் | 112


## நூல் மதிப்பீடு


**தமிழனின் தத்துவம் திருக்குறள் அறம் (பொருளும் விளக்கமும்) பரிமேலழகர் இங்கே திருத்தப்படுகிறார்**
**Unspecific: The philosophy of Tamil is the Thirukkural Charity (Meaning and explanation) Parimelazhakar is edited here**
முனைவர் பா.கவிதா | 120


...

மதிப்பிடப்பெற்றது

# வினாப் பெயர்கள்: இலக்கணிகளின் பார்வைகளும் பதிவுகளும்

*Interrogative Nouns: Grammarian's Perspectives and Observations*

முனைவர் கி.சங்கர நாராயணன்
உதவிப் பேராசிரியர், தமிழ்மேம்பாட்டுச் சங்கப்பலகைத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம், மெரினா வளாகம், சென்னை - 5
krksankaraatamil@gmail.com

Abstract: This Paper attempts to examine the perspectives and observations of Tamil traditional grammarians in regard to the Interrogative Nouns and to trace on the development of their views Chronologically, i.e. right from Tolkappiyam The Modern Literary corpus will also be used to find out whether there are any Significant development are noticeable in the use of Interrogative Nouns.

Keywords: Tolkappiyam, Literary corpus, வினாப் பெயர், இலக்கணி

வினாப் பெயர்களின் வருகை, அமைப்பு முறைகள் குறித்த இலக்கணிகளின் பார்வைகளையும் பதிவுகளையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

தொல்காப்பியம் திணை அடிப்படையில் பெயர்களை மூன்றாகப் பிரிக்கின்றது. அவையாவன,

1. உயர்திணைப் பெயர்
2. அஃறிணைப் பெயர்
3. ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமைய (விரவுப் பெயர்)

தொல்காப்பியம் (தொல்.162-165), அவன், இவன், உவன், அவள், இவள், உவள், அவர், இவர், உவர், யான், யாம், நாம், யாவன், யாவள், யாவர் என்னும் பெயர்களும், ஆண்மையடுத்த மகன் என்னும் கிளவி (ஆண்மகன்), பெண்மையடுத்த மகள் என்னும் கிளவி (பெண்மகள்), பெண்மையடுத்த இகர இறுதி (பெண்டாட்டி), நம் ஊர்ந்துவரும் இகரமும் ஐகாரமும் (நம்பி, நங்கை), முறைப்பெயர் சுட்டா மகன், மகள், மாந்தர், மக்கள் என்னும் பெயரும், ஆடூஉ, மகடூஉப் பெயர், சுட்டெழுத்தை முதலாக உடைய அன்னும் ஆனும் (அன்னன், அன்னான்), சுட்டெழுத்தை முதலாக உடைய பெண்டென் கிளவி (அன்னள், அன்னாள்), ஒப்பொடு வரும் கிளவி (கண்ணன்னனன்), எல்லாரும், எல்லீரும், பெண்மையடுத்த மகன் என்னும் கிளவி (பெண்மகன்), நிலப்பெயர் (மதுரையான்), குழுப்பெயர் (சங்கத்தான்), குடிப்பெயர் (சேரன்), வினைப்பெயர் (தச்சன்), உடைப்பெயர் (பொன்னன்), பண்புகொள் பெயர் (கரியன்), பல்லோர்க் குறித்த முறைப்பெயர் (தாயர், தந்தையர்), பல்லோர் குறித்த சினைப்பெயர் (குருடர், செவிடர்), பல்லோர் குறி;த்த திணைப்பெயர் (வேட்டுவர்), கூடிவரும் வழக்கின் ஆடியல் பெயர் (செவ்வணியர், வெள்ளணியர்), எண்ணியற்பெயர் (பதின்மர்) என்ற உயர்திணைப் பெயர்களைக் குறிப்பிடுகின்றது.

*"அவ்வழி*
*அவன் இவன் உவனென வரூஉம் பெயரும்*
*அவள் இவள் உவளென வரூஉம் பெயரும்*
*அவர் இவர் உவரென வரூஉம் பெயரும்*
*யான்யாம் நாமென வரூஉம் பெயரும்*
*யாவன் யாவள் யாவ ரென்னும்*
*ஆவயின் மூன்றோடு அப்பதி னைந்தும்*
*பாலறி வந்த உயர்திணைப் பெயரே"* (தொல்.சொல்.162)

*"யாதுயா யாவை யென்னும் பெயரும்"* (தொல்.சொல்.167)

தொல்காப்பியம் (தொல்.167-171), அது, இது, உது, அவை, இவை, உவை, அஃது, இஃது, உஃது, அவ், இவ், உவ், யாது, யா, யாவை என்னும் பெயர்களும், பல்ல, பல, சில, உள்ள, இல்ல, வினையாலணையும் பெயர் (உழுதது), பண்புப் பெயர் (கரியது), இனைத்து எனக் கிளக்கும் எண்ணுக்குறிப்பெயர் (ஆயிரம் தந்தான்), ஒப்பின் ஆகிய பெயர்நிலை (கண் போன்றது) ஆகிய அஃறிணைப் பெயர்களைக் குறிப்பிடுகின்றது.

விரவுப்பெயர்களாகத் தொல்காப்பியர் (தொல்.174-179), இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர், முறைப்பெயர், தாம், தான், எல்லாம், நீயிர், நீ என்பனவற்றைக் குறிப்பிடுகின்றார். மேலும்,

**இயற்பெயர்** - பெண்மை இயற்பெயர், ஆண்மை இயற்பெயர், பன்மை இயற்பெயர், ஒருமை இயற்பெயர்

**சினைப்பெயர்** - பெண்மை சினைப்பெயர், ஆண்மைச் சினைப்பெயர், பன்மைச் சினைப்பெயர், ஒருமைச்சினைப்பெயர்

**சினைமுதற்பெயர்** - பெண்மை சுட்டிய சினைமுதற்பெயர், ஆண்மை சுட்டிய சினைமுதற்பெயர், பன்மை சுட்டிய சினைமுதற்பெயர், ஒருமை சுட்டிய சினைமுதற்பெயர்

**முறைப்பெயர்** - பெண்மை முறைப்பெயர், ஆண்மை முறைப்பெயர்

நேமிநாதம் (நேமி.55), எவன், எவள், எவர், யாவன், யாவள் என்ற உயர்திணை வினாப்பெயர்களையும், எது, எவை, யாது, யாவை, இவை முதலிய அஃறிணை வினாப்பெயர்களையும் குறிப்பிடுகின்றது (நேமி.57).

நன்னூல், எவன், ஏவன், யாவன் என்பனவற்றை ஆண்பால் வினாப்பெயர்களாகவும் (நன்.276), எவள், ஏவள், யாவள் என்பனவற்றைப் பெண்பால் வினாப்பெயர்களாகவும் (நன்.277), எவர், யாவர் என்பனவற்றைப் பலர்பால் வினாப்பெயர்களாகவும் (நன்.278), எது, ஏது, யாது என்பனவற்றை அஃறிணை ஒன்றன்பால் வினாப்பெயர்களாகவும் (நன்.279), எவை, ஏவை,

யாவை என்பனவற்றை அஃறிணை பலவின்பால் பெயர்களாகவும் (நன்.280) நன்னூல் சுட்டுகின்றது.

இலக்கண விளக்கம் (இல.வி.177), எவன், ஏவன், யாவன் என்னும் உயர்திணை வினாப்பெயர்களையும், எது, ஏது, யாது, எவை, ஏவை, யாவை என்னும் அஃறிணை வினாப்பெயர்களையும் (இல.வி.180-181) குறிப்பிடுகின்றது.

தொன்னூல் விளக்கம் (தொ.வி.65), எது, ஏது, யாது என்ற உகர ஈற்று வினாப்பெயர்களைச் சுட்டுவதைப் பின்வரும் நூற்பா விளக்குகின்றது.

*"எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்*
*ஏ இரு வழியும் வினா ஆகும்மே*
*எவன் என் வினா வினைக் குறிப்பு இழி இருபால்"* (தொ.வி.சொல்.102)

சுவாமிநாதம் (தொ.வி.39), எவன், யாது என்னும் வினாபெயர்களைக் குறிப்பிடுகின்றது.

முத்துவீரியம், எவன், யாவன் என்னும் ஆண்பால் வினாப்பெயர்களையும் (மு.வீ.477), எவள், யாவள் என்னும் பெண்பால் வினாப்பெயர்களையும் (மு.வீ.479), எவர், யாவர் என்னும் வினாப்பெயர்களையும் (மு.வீ.481), யாது என்னும் ஒன்றன்பால் வினாப்பெயரையும் (நூ.482) குறிப்பிடுகின்றது. தமிழ்நூல் (தமிழ்.54), எவள் என்னும் வினாப்பெயரினை மட்டும் சுட்டுகின்றது.

தென்னூல் (தென்.86,88), உயர்திணைப் பெயரில் வினாவெழுத்துக்கள் என்று குறிப்பிடுகிறதே தவிர, எந்த எழுத்துக்கள் என்பதைச் சுட்டவில்லை. அஃறிணைப்பெயரில் எது, யாவை என்பனவற்றைக் குறிப்பிடுகின்றது.

தமிழ்க் காப்பு இயம் (த.கா.இ.97-100), யாவன், யாவள், யாவர், யாது, யாவை ஆகிய ஐந்தும் முறையே ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பாலுக்கு உரிய வினாவெழுத்தாகும் என்கிறது. மேற்கூறிய ஐந்தின் மருவிய நிலையாக எவன், எவள், எவர், எது, எவை என்பனவற்றைக் குறிப்பிடுகின்றது. ஏன், எங்கே என்னும் இரண்டு பெயர்களும் ஐம்பால் மூவிடத்திற்கும் உரியனவாகும் என்கிறது.

Who என்னும் வினாப்பெயர் உயர்திணைக்கும் what என்னும் வினாப்பெயர் அஃறிணைக்கும் உரியனவாக வழக்கில் வரையறை செய்யப்பட்டிருக்கிறது என்றும் மு.வ. சுட்டுகிறார் (2003:53).

மேலும், யாரை என்னாமல் யார் என்று குறுகிய வடிவில் சொல்லை வழங்குவதால், முயற்சிச் சுருக்கத்தோடு காலச் சிக்கனமும் ஆயிற்று என்கிறார் யெஸ்பர்ஸன் (மு.வ.,2003:223).

**தற்காலத் தமிழில் வினாப் பெயர்கள்**

தடுப்பது எது?
எதையும் தாண்டாததால் இருந்த இடத்திலேயே நான் இருப்பதாகவும் அர்த்தமில்லை.

ஏன் ஊர்ஊராக அலைய வேண்டும்?
அவ எப்படி ஆளு
கடிதமா, கடிதம் எழுதியவரா உயிருடன் இருக்க வேண்டியது எது?
யார் யார் எந்தெந்த அளங்களுக்குப் போக வேண்டும்
யார் என்ன கொடுக்க போகிறார்கள்?
யார் யாருக்கு அடிபட்டது?
எதுக்கு அழுதே
எத்தனை
என்ன பெரியாளு?

வினாப் பெயர்களில் எது, எதை, ஏன், எப்படி, யார், யாரு, எதுக்கு, எத்தனை, என்ன போன்ற வினாப் பெயர்களின் வருகை முறைகள் தற்காலத் தமிழில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. வினாப்பெயர்களை இலக்கணிகள் உயர்திணை, அஃறிணை என்ற பிரிவாகவும், ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்ற பிரிவாகவும் பிரித்து இலக்கணம் வகுத்துள்ளமையை அறியமுடிகின்றது. தற்காலத் தமிழின் மொழிநிலை, பல புதிய இலக்கண மாற்றங்களையும், வளர்ச்சி நிலைகளையும் கொண்டு திகழ்வதோடு, புதிய இலக்கணக் கூறுகளைக் கொண்டு அமைவதும் கவனிக்கத்தக்கது. இலக்கண உலகில் மொழிநிலையில் ஏற்படும் இவ்வகை மாற்றங்கள், வளர்ச்சிகள், புதிய போக்குகள் போல்வனவற்றைக் தொடர்ந்து காணுவது, பதிவு செய்வது பிற்காலத்தில் மொழிஆய்வுகளுக்குப் பெரிதும் பயன்படும்.

**துணைநின்ற நூற்கள்**


- அழகேசன் சு., (உ.ஆ.), 2003, நன்னூல் சொல்லதிகாரம், சுதாபதிப்பகம், தூத்துக்குடி.
- ..., (ப.ஆ.), 2008, தொல்காப்பியம், சுதாபதிப்பகம், தூத்துக்குடி.
- ஆறுமுக நாவலர், 1939, இலக்கணச் சுருக்கம், வித்யா நுபாலன அச்சகம், சென்னை.
- ..., 1971, நன்னூல் - காண்டிகையுரை, வித்யா நுபாலன அச்சகம், சென்னை.
- இளம்பூரணர் (உ.ஆ.), 1963, தொல்காப்பியம் - சொல்லதிகாரம், கழக வெளியீடு, சென்னை.
- இளவரசு சோம. (ப.ஆ.), 1990, நன்னூல் - விருத்தியுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.
- காசுமான் மி., 1998, தமிழ்த்தாய் சொல்லிலக்கணம், காசுமான் பதிப்பகம், நந்தன் காடு, மார்த்தாண்டம்.
- காசுமான் மி., 2005, தமிழ்க் காப்பு இயம், காசுமான் பதிப்பகம், நந்தன் காடு, மார்த்தாண்டம்.
- குணவீர பண்டிதர், 1956, நேமிநாதம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.
- கோபாலையர் தி.வே.(ப.ஆ.), 1990, இலக்கணக் கொத்து, சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

- கோவிந்தராச முதலியார் கா.ரா.(கு.உ.), 1973, நேமிநாதம், கழக வெளியீடு, சென்னை.
- சங்கர நமச்சிவாயர் (உ.ஆ.), 1991, நன்னூல் - விருத்தியுரை, உ.வே.சா.நூல் நிலையம், சென்னை.
- சண்முகம் செ.வை.(ப.ஆ.&உ.ஆ.),1975, சுவாமிநாதம், மொழியியல் துறை வெளியீடு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.
- சரவணத்தமிழன் த., 1996, தமிழ்நூல், தமிழன் பதிப்பபகம், இயற்றமிழ்ப் பயிற்றகம், திருவாரூர்.
- சுந்தர மூர்த்தி,கு (ப.ஆ.), 1972, முத்துவீரியம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.
- சுப்பிரமணியம் ச.வே., 1978(ஆ), தொன்னூல் விளக்கம், தமிழ்ப் பதிப்பகம், அடையாறு, சென்னை.
- சேனாவரையர் (உ.ஆ.)1997, தொல்காப்பியம் - சொல்லதிகாரம், கழக வெளியீடு, சென்னை.
- தண்டபாணிசுவாமிகள், 1990, ஏழாமிலக்கணம், பூவை.கலியாண சுந்தரமுதலியார் பதிப்பு,இந்து தியாஜிகல் யந்திர சாலை, தஞ்சாவூர்.
- தண்டபாணிசுவாமிகள், 1991, அறுவகை இலக்கணம், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர்.
- தமிழண்ணல், 2006, தொல்காப்பியம் சொல்லதிகாரம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- தமிழன் த.ச., 1996, தமிழ்நூல், தமிழன் பதிப்பகம், திருவாரூர்.
- தாமோதரம் பிள்ளை (ப.ஆ.), 2008, வீரசோழியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
- தெய்வச்சிலையார் (உ.ஆ.), 1962, தொல்காப்பியம் - சொல்லதிகாரம், கழக வெளியீடு, சென்னை.
- நாகராசன் ப.வெ.(ப.ஆ., உ.ஆ.), 1991, அறுவகை இலக்கணம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
- பாலசுந்தரம் ச., 1991, தென்னூல், தாமரை வெளியீட்டகம், தஞ்சாவூர்.
- மு.வ., 2003, மொழி வரலாறு, சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம், திருநெல்வேலி.